### 5-ந்தேதி நடக்கிறது:

# "காலிங்கராயன் கதை" நூல் வெளியீட்டு விழா

## மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி-நடிகர்கள் சத்யராஜ்-சிவக்குமார் பங்கேற்பு

ஈரோடு, செப்.3- "காலிங்கராயன் கதை" நூல் வெளியீட்டு விழா வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இதில் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி, நடிகர்கள் சத்யராஜ், சிவக்குமார் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

### நூல் வெளியீட்டு விழா

ஈரோடு கொங்கு கலையரங்கில் வருகிற 5-ந்தேதி (ஞாயிறு) காலை 9 மணிக்கு "காலிங்கராயன் கதை" நூல் வெளியீட்டு விழா நடக்கிறது. விழாவுக்கு தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் தலைமை தாங்குகிறார். எஸ்கேஎம்.நிறுவனங்களின் தலைவர் எஸ்கேஎம்.மயிலானந்தன் வரவேற்று பேசுகிறார். சுதா மருத்துவமனை டாக்டர் எஸ்.தனபாக்கியம் கந்தசாமி குத்துவிளக்கேற்றி வைக்கிறார். மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் காலிங்கராயன் படத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார். நீதிபதி செங்கோட்டுவேலன் தொடக்க உரையாற்றுகிறார். நடிகர்கள் சத்யராஜ், சிவக்குமார் ஆகியோர் அறிமுகவுரையாற்றுகிறார்கள். முனைவர் சிலம்பொலி செல்லப்பன் நூல் சிறப்புரையாற்றுகிறார். புலவர் செ.ராசு நூல் ஆய்வுரையாற்றுகிறார். உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் கே.செல்லமுத்து, சென்னை கொங்கு நண்பர்கள் சங்க தலைவர் கே.சி.காளியண்ணன் ஆகியோர் வாழ்த்தி பேசுகிறார்கள். யூ.ஆர்.சி.நிறுவனங்களின் தலைவர் யூ.ஆர்.சின்னசாமி, சக்தி மசாலா நிறுவனங்களின் தலைவர் பி.சி.துரைசாமி, பெங்களூர் கர்நாடக கவுண்டர்கள் சேவா சங்கம் ஆர்.அரங்கதுரைராஜ், வேளாளர் கல்வி நிறுவனங்கள் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர், கொங்கு கலையரங்க தலைவர் ஆர்.வேலுசாமி ஆகியோர் நூல் பிரதிகளை பெற்றுக் கொள்கிறார்கள். விழாவில் காலிங்கராயன் வம்சா வழியினர் ஏ.எம்.ஆர். கிருஷ்ணராஜ் காலிங்கராயர், ஏ.எம்.ஆர். மோகன்ராஜ் காலிங்கராயர், ஏ.எம்.ஆர். அருண்குமார் காலிங்கராயர் ஆகியோர் கவுரவிக்கப்படுகிறார்கள். பின்னர் நூல் ஆசிரியர் பாஸ்கரதாசன் ஏற்புரையாற்றுகிறார். முடிவில் கொங்கு என்.கொளந்தசாமி நன்றி கூறுகிறார். விழா நிகழ்ச்சிகளை திரைப்பட இயக்குனரும் நடிகருமான விஜய்கிருஷ்ணராஜ் தொகுத்து வழங்குகிறார்.

### ஏற்பாடு

இதற்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் வி.எம்.வேலாயுதம், தி.செ. பழனிவேலு, டி.கே.சுப்பிரமணியன், இ.டி.ராஜமாணிக்கம், எஸ்.வி. பழனிசாமி, கே.பி.சண்முகம் ஆகியோர் செய்து வருகிறார்கள்.